DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.22/2022**

**2025-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 22- ம் நாள் செவ்வாய்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.3 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.முத்துக்குமார் நகல் பரிசோதகர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 3 | தொழில் | - | பேன்ஸி கடை |
| பெயர் | - | சோமசுந்தரம் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | நடராஜன் | சமயம் | - | |
| கிராமம் | - | கலைஞர் நகர் | வயது | - | 53/2025 |
| சாதி | - | | | | |

**<u>22-04-2025</u>**

**( எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்)**

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வால்பாறை வளையல்கடை வீதியில் பேன்ஸி ஸ்டோர் நடத்தி வருகிறேன். அ.சா.1 அகமத்சாதிக் என்பவரை தெரியும் அவர் எனது பக்கத்து கடைக்காரர் ஆவார். ஆஜர் எதிரியை சம்பவத்தன்று பார்த்திருக்கிறேன். கடந்த 23.02.2022-ம் தேதி மாலை 07.00 – 07.15 மணியளவில் நான் எனது கடையில் இருந்தபோது, பக்கத்துக்கடையான அகமத் கடையில் அடி தடி போல் சத்தம் கேட்டது. நான் அங்கு சென்று பார்த்த போது அகமத் இரத்தக்கரையுடன் வெளியே வந்தார். எதனால் அப்போ வெளியே வந்தார் என்று தெரியாது. இருசக்கர வாகனத்தில் ஆஜர் எதிரி கடைக்கு வந்திருந்தார். என்ன பிரச்சனை நடந்தது என்று தெரியாது. அ.சா.1 இரத்தக்கரையுடன் வெளியே வந்தார். அக்கம் பக்கத்து கடைக்காரர்கள் பார்த்தார். அகமத்து petition க்கு மூக்கில் இருந்து இரத்தம் வந்தது. அவருக்கு ஏதோ ஒரு நோய் இருப்பதாக கேள்விப்பட்டேன். இச்சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. போலீசார் விசாரணையில் அ.சா.1, அகமது சாதிக் என்பவருக்கு ஹீமோபீலியா நோய் இருப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அ.சா.1-க்கு நோயின் காரணமாக அடிக்கடி மூக்கில் இரத்தம் வரும் என்றால் சரிதான். சம்பவத்தினத்தன்று ஆஜர் எதிரி அ.சா.1-ன் கடைக்கு சென்றதையோ, கடைக்குள் இருந்து வெளியே வந்ததையோ நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். கடைக்குள் என்ன நடந்தது என்று நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். அ.சா.1-ன் கடைக்கு முன்புறம் வெளியே ஆஜர் எதிரிக்கும், அ.சா.1-க்கும் சண்டை எதுவும் நடக்கவில்லை என்றால் சரிதான். ஆஜர் எதிரி எந்த பைக்கில் வந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரியுடன் வேறு யார் வந்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவத்தின் போது அ.சா.2 ராஜா, சாட்சி ரகுமான் அங்கு இருந்தார்களா என்றால் அதை நான் பார்க்கவில்லை. அங்கு நிறைய பேர்கள் கூடியிருந்தார்கள். சுமார் 50 நபர்கள் அங்கு

கூடியிருப்பார்களா என்றால் 20 நபர்கள் கூடியிருப்பார்கள்.

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.